

அமரர்.

# திரு.வேலுப்பிள்ளை கனகேஸ்வரன் (சுரேஸ்)

அவர்களது இறைபதப்பேறு குறித்த

நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் பருத்தித்துறையை பிறப்பிடமாகவும்,
திருகோணமலை புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# வேலுப்பிள்ளை கனகேஸ்வரன் (சுரேஸ்)

## அவர்களின்
## 31ம் நாள் நினைவு மலர்

"ஈஸ்வர தீபம்"

**20.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அன்புத் தெய்வத்தின் பொன்னடிகளிற்கு

## இந்நூல்

## சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விருட்சத்தின் நீராக,

வேராக நின்று நிழல் தந்து வாழ்வாங்கு

நாங்கள் வாழ வழியாவும் காட்டி,

உற்றார்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருடனும்

அன்பாகவும், பாசமாகவும், ஒன்றிணைத்து வாழ

உங்களையே அர்ப்பணித்த

எங்கள் அன்பு தெய்வத்துக்கு

"ஈஸ்வர தீபம்" என்னும் இம்மலரை

சமர்ப்பணம் செய்கின்றோம்.

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர்துதி

திருச்சிற்றம்பலம்

தேவரென் திசைக்கதிபதி சிதரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலானோரை — மேவியும்
பாரணிந்த கண்மணிப்பிள்ளை பாதச்சுவடதனைக்
கவிபுனையக் காரணிந்த யானைமுகன் காப்பு.

## தேவாரம்

எண்ணுக்கேள் என்சொல்லி எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களைக் கண்இல்லேன்
உன் கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது ணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றோன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

# திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டியழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

# திருப்புகழ்

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலகத்திய ஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதரவைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாமகிரிப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகி வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்க வாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகம்

# எட்டாம் திருமுறைப்பாடல் திருவாசகச் சிறப்பு சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்

தொல்லையெனும் பிறவி சூழும் தலைநீக்கி
அல்லல் அறுத்தானந்த மாக்கிதே எல்லை
மருவாநெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் மென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்ற றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் பொய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல் வெல்க
சிரங்குவிவார ஓங்குவிக்கும் சீரோன் கழல்கள் வெல்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
நேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவனெவன் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தான் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பவன்யான்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுனது வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயாஎன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய்த் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின் மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நனியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையோன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மரங்கப் புலனைஇந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருக்கும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மெல்வறந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்ததயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்நானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே.

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்மிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்தமாலை

## மோட்சமாலை

## விநாயகர்

## திருச்சிற்றம்பலம்

அரியானைக் கணபதியே அரசனார் சேயே
ஐங்கரனே பங்கையம் சேர் உமையாள் கண்ணே
கரிமுகனே கற்பகமேகசுடறுத்து
கவியதற்கு முன்னிற்க வேண்டுமையா
பரிவொடு மோட்சவழிப் பாதைகான
பாழுடம்பு விட்டகன்று பறந்ததையா
தெரியாத சீவனுக்காய் துணையாய் நின்று
திருமாலின் பதம்சேர அருள்செய்வாயே.

அருள் செய்வாய் குஞ்சரனே அமரரோடு
அடியாரின் ஆத்மாவை அடையச் செய்து
பெருவழியில் இடைநின்று மோட்சப் பாதை
பிழைபொறுத்து சீவனுக்கு காட்டுமையா
கருணை கொடு கற்பகமே கழிறேமாலில்
கண்ணரிட வைகுந்த வளியில் நின்று
இருளகற்றி இந்திரபதி புகுதற்பாதை
இன்பமுடன் அளித்தருளப் போற்றினோமே

போற்றி ஜெககணநாதா போற்றி போற்றி
பொன்மலர்தாழ் இணையடிகள் போற்றி போற்றி
ஆர்ப்பரித்து இச்சீவன் அலையவண்ணம்
ஆனைமுக வாரரணே அமரர் வாழும்
ஏற்றமுறு வைகுந்தம் போகும் பாதை
இன்பமுடன் காட்டுமைய அன்புவைத்து
சீற்றமுடன் உமைத் தொழுதோம் சித்தி முத்தித்
திருக்கயிலாய வீடடைய அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி

அம்பிகை உமையேருத்திரி அச்சுதன் தங்கையாளே
எம்பிரான் தேவநீலி ஈஸ்பரி கௌவுரிமாரி
கொம்புடை மகிடாசூரன் கூர்பலி இட்டகாளி
சந்திரப்பதிமா வைகுந்தம் தாயேநீ காட்டுவாயே

சாம்பவிதுர்க்கை வாலைச்சாத்தகி சுடலைநாச்சி
பாம்பணி பராபரத்தி பகைவரை அழித்த சூலி
நாராயணிவாரகி தேவிநலமருள் உருத்திராணி
புவனை அபிராமிமோட்ச புகுவழி காட்டுவாயே

ஓம்சக்தி உலகமாதா உன்னடி தஞ்சம்மமா
வாமவதேவநீல வண்ணரின் பதியைநாடி
ஊன்னுடல் விடுத்துச் சீவன் உடன்னெதிர் வந்தம்மாம்மா
கானொடு காளித்தாயே காடடுவாய் வைகுந்தம் நீயே

## சிவன்

அத்தனே அரனே ஆதிஅமலனே உமையாள்பங்கா
பித்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்தவெண்ணீறு பூசிச்சுடலையில் ஆடும் சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய

கற்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டு வந்தார்
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நரகில்புக்கா(து)
நற்பதி மோட்சவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் குடும்சிவசிவா இவரின் ஆத்மா
தங்குகள் தடைகள்யின்றி தட்சணம் அனைத்துக் கொண்டு
அங்கு உன்பாதம் போற்ற ஆண்டருள் நமசிவாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்

தேவர்கள் இடுகண்தீர்த்த செந்தியம் பதியின்வாழ்வே
தாமதம் இன்றிச்சீவன் தனிவளி வந்ததையோ
வேலவா மோட்சவீடு வித்தமமாம் பதியைக் காட்டி
காலனார் கொடுமை செய்யாக் கந்தனே காத்திடாயே

சரணமே சரணம் செவ்வேள் சரணபவனே சிவன்
பிரணவ ஒலியினோடு பிரமனின் படைப்பைவிட்டு
அரகரமுருகா வந்துன் அடைக்கலம் சேர்ந்ததையோ
வரமருள் வடிவேலோனே வைகுந்தம் அருள் செய்வாயே

அழகனேகுமரா ஆண்டிஅறுபடை உறையும் ஞானப்
பழம்பெரும் கனியே மோட்சப் பதிதனை அடைந்தசீவன்
உன்கழலடி பணிந்து கொண்டு கடைத்தற்றே முத்திநல்காய்
இளநகை அயில்வேல்கொண்ட ஏந்தலே போற்றி போற்றி

## நாரயணன்

அரிகரிராம ராமா அச்சுதா அசோதை புத்திரா
சிறிநமோ கிஸ்னதேவா திருவடி அழந்தபாதா
கருமுகில் மேகவண்ணா கருடவாகனனே கண்ணா
முரகரிமுகுந்தா மோட்ச முத்திவீடளித்திடாயே

மாதவா வெங்கடேசா மாயனே வைகுந்தவாசா
ஆதவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமதுதாழில்
நீதனே நீலவண்ணா நெடியவா மோட்சவீடு
மதிசூதனேள நந்தகோபாலா துணைபுரிந் தளித்திடாயோ

பூதகிமுலைப் பாலுண்ட புருசோத்தம தேவதேவா
ஜனாகிமணாளா றங்காயாதவ குலதிந்தா
பூமகள்கண வாமுத்தி மோட்சநற் பரகதிநல்கி
தேவர்கள் தங்களோடு திருக்கயிலாயம் சேர்ப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமாதேவி

பூமிமாதாதேவியம்மா உன்பொன்னடி சரணம்தாயே
தாமதமின்றி இந்த சடலத்தை ஏற்றிடம்மா
மேலும் இவ்வாத்மா தன்னை விரைந்து நீ அழைத்திடாது
நாமிநின் சரசகோபால் சன்நிதி சேர்த்திடாயே

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
உடலது உந்தன் பாரம் உயிருமே மோட்சவீடு
இடைவளி தடுமாறாது இன்முகம் கருணைகூர்ந்து
அம்மையே சடலந்தன்னை அன்புடன் ஏற்றிடாயே

அடைக்கலம் உனக்கேஅம்மா ஆணவமாய் கைக்கூடு
படைத்தனன் பிரமதேவன் பழுதின்றி மனிதனாகழு
விடைகிடைத்தது சீவனுக்கு விண்ணில்நல் மோட்சவீடு
படையொடு பாடைசேர்த்தோம் பாழுடம் போற்றிடாயே

## சுபம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சுபமங்களம்
வைகுந்த மோட்சமாலை முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் சரிதம்

பலரும் அறியாத ஒரு மாமனிதனின் போராட்ட வாழ்வும், அவர் அடைந்த விஸ்வரூப வெற்றியின் உச்சத்தைப் பற்றியும் பார்ப்போம். வேலுப்பிள்ளை அம்பிகாதேவி தம்பதியினருக்கு தவப்புதல்வனாய் 1986 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தின் ஒளி நிலவாக 26 நட்சத்திரங்களின் யாசகனாய் பொன்னான புதன் கிழமையில் யாழ் போதனா வைத்திய சாலையில் இவர் பிறந்தார்.

சுந்தர வனப்பும் மழலையின் சிரிப்பும் அனைவரையும் காந்தம் போல் ஈர்த்தது. தனது பெற்றோர்களால் " கணகேஸ்வரன் " எனும் நாமம் கொண்டும் " சுரேஸ் " எனும் செல்லப் பெயர் கொண்டும் அழைக்கப்பட்டார். பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவரது கல்வி, அறிவு, அடக்கம், பொறுமை, மற்றவருக்கு உதவுதல், யார் மனதையும் காயப்படுத்தாத பேச்சு போன்ற மேன்மையான குணங்களைக் கொண்டார். இவர் தனது ஆரம்பக்கல்வியை விசுவமடு பிரமந்தனாறு தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்றார். பாடசாலை சிறு பருவத்தில் இருந்தே கல்வியில் பல சாதனைகளையும் ஆசிரியர்களுக்கு மத்தியில் நற் பெயரையும் பெற்றார்.

அந்த பாடசாலையில் வரலாறு காணாத ஒரு சாதனையைச் செய்து காட்டினார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மிகச் சிறந்த வகையில் சித்தியடைந்தார். சிறு பராயத்திலேயே நல்ல நண்பர் கூட்டத்தையும் சம்பாதித்தார். இரண்டு தம்பிகளையும் பாசத்தோடு பராமரித்து வந்தார். யுத்தத்தின் காரணமாக உயிர்பிழைத்து வாழ தனது பாட்டியுடன் 2000ம் ஆண்டு திருகோணமலைக்கு இடம்பெயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். பட்டாம்பூச்சியாய் பறந்து திரியும் வயதில் குடும்பத்திற்காக உழைத்துக்கொண்டே கல்வியைத் தொடர்ந்தார். தனது பாட்டியுடன் கல் உடைக்கும் தொழிலுக்குச் சென்றார். தனது சாதாரண தரப் பரீட்சையை 2002ல் மாத்தளை கவுடுபெலெல்ல மகா வித்தியாலயத்தில் எழுதினார். குடும்ப வருமானத்திற்காக அவ்வப்போது கிடைக்கும் வேலைகளையெல்லாம் செய்து வந்தார். வாலிபர்கள் எல்லோரும் வட்டமிட்டுச் சுற்றித் திரியும் வயதில் தன் தந்தையுடன் வேலைக்காக வயலுக்குச் சென்றார். சைக்கிளில் பொருட்களை ஏற்றி பல மைல்கள் சென்று வியாபாரம் செய்தார். அந்த ஆர்வம் தான் அவர் வாழ்வில் வியாபாரம் எனும் விருட்சத்திற்கு வித்திட்டது. சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப் போல அவர் தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் சாதகமாக்கிக்கொண்டார்.

இரண்டு தம்பிகளையும் தனது வாழ்க்கையாக எண்ணி வாழ்ந்து வந்தார். சிறு குடிலில் வாழ்ந்தாலும் அப்பா, அம்மா, தம்பிகள், உறவினர்கள் என பலரும் சூழ்ந்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். 2005ம் ஆண்டு தி/ஸ்ரீ/கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் தனது உயர்தரப் பரீட்சையை எழுதி முடித்தார். அதனைத் தொடர்ந்து பல்வேறு வகையிலான சமூக அடிப்படையினைக் கொண்ட அநேக செயற்பாடுகளில் ஈடுபட்டார். பல நல்ல மனிதர்களின் நட்பினையும் அவர்களின் வழிகாட்டல்களையும் கடைப்பிடித்தார்.

தன்னால் முடிந்த உதவிகளை பிறருக்கு செய்து வந்தார். எண்ணற்ற தொழில்களிலும் அனுபவம் பெற்றார். நல்ல நண்பர்களையும் இக்காலக் கட்டத்தில் சந்தித்தார். இசை, இலத்திரனியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரங்கள், கணிணி, மோட்டார் சைக்கிள், வாகனங்கள், தொலைபேசி ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். பல்வேறுபட்ட சமூக பொது நிகழ்வுகளில் கலந்து கொண்டு தனது தனித்தன்மையை நிரூபித்தார். சிறந்த பேச்சாளர் எனும் பாராட்டையும் பெற்றார். காலப்போக்கில் தனது கவனம் புகைப்படம் மீதும் வீடியோ பதிவின் மீதும் திரும்பியது. ஒரு சிறிய கமெராவில் தொடங்கிய அவரது புகைப்பட தாகம் தேடித் தேடி தனது ஆற்றலையும், திறமையையும் வளர்த்தார். பல துறைகளில் தனது கவனத்தை செலுத்தினார். அதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுய தொழிலை ஆரம்பிக்க முயன்றார். மூலதனம் ஏதும் கையில் இன்றி அரும்பாடுபட்டு பணத்தை திரட்டினார். "அம்பிகா ஸ்ரூடியோ" என்று தனது தாயின் பெயரில் தொழிலை அன்புவழிபுரம் எனும் கிராமத்தில் 2012ம் ஆண்டு ஆரம்பித்தார். வாடிக்கையாளர்களை தன் அன்பாலும், வசீகரப் பேச்சாலும் தன் வசமாக்கிக் கொண்டார். இரண்டு தொழிலாளர்களுடன் தொழிலை ஆரம்பித்தார். மெது மெதுவாக தனது வீட்டையும் சிறிய அளவில் நிர்மாணித்தார். 2014ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்தார். அதன் பின்னர் தன் தம்பிகளுக்கும் திருமணத்தினை நடாத்தினார். காலப்போக்கில் இரண்டு பெண் குழந்தைகளுக்கு நல்ல தந்தையானார். தன் தம்பிகளின் குழந்தைகளையும் தன் குழந்தை போலவே அன்பு பாராட்டினார்.

தொழிலின் முன்னேற்றத்தைப் பற்றியும் அடிக்கடி நினைவு கூறுவார். மூலதனம் இல்லையே என முடங்கிக் கிடக்காது தனது முயற்சியையும் அயராத உழைப்பையும் தம்பிகளின் பங்களிப்பையும் பெரிதாக கருதி வாழ்ந்தார். காலப்போக்கில் "அம்பிகா ஸ்ரூடியோ" வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கிளைகளாக நிறுவினார். அவரோடு தோல் கொடுக்க பல நல்ல உள்ளங்களையும் சேர்த்துக் கொண்டார். சிறிது சிறிதாக ஆரம்பித்த அவருடைய ஸ்ரூடியோ தாகம் அம்பிகா ஸ்ரூடியோ, அம்பிகா பிறின்டர்ஸ், அம்பிகா கேக், அம்பிகா அழகு நிலையம், அண்மையில் ஆரம்பித்த அம்பிகா அறிவு மையம் என பல துறைகளுக்கு வித்திட்டது. வறுமையின் போது தான் அனுபவித்த துன்பங்களை யாரும் அனுபவிக்கக் கூடாது என்ற மனப்பாங்கைக் கொண்டவர்.

இவர் ஒரு நல்ல மகன், நல்ல சகோதரன், நல்ல கணவன், நல்ல தந்தை, சிறந்த சிந்தனையாளர், நல்ல முயற்சியாளன், நல்ல தலைவன் என்ற பல பதவிகளுக்கு பாத்திரமானார். இவ்வாறான நல்ல உள்ளம் கொண்ட மாமனிதன் தன்னுடைய வாழ்நாளிலே மற்றவர்களுக்கு உதவி செய்வதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர். அதனால் தான் என்னவோ இறைவனுக்கும் இவரின் மேல் விருப்பம் ஏற்பட்டு தனக்கருகிலே அவரை அழைத்துக் கொள்ள நினைத்து 2023.10.19 ம் திகதி வியாழக்கிழமை அன்று மண்ணுலக வாழ்வை விடுத்து விண்ணுலகிற்கு இறைவன் அவரை அன்போடு அழைத்துக் கொண்டார். அவர் எம்மை விட்டு விண்ணுலகம் சென்றாலும் அவருடைய சேவைகள் அவர் எங்களுக்காக விட்டுச் சென்ற வாழ்க்கை எங்களோடு இருந்து எங்களை ஒவ்வொரு படிநிலைகளிலும் வழிப்படுத்திய அந்த நினைவுகள் என்றுமே எங்களால் மறக்க முடியாது. அவர் என்றும் எங்களுக்கு உறுதுணையாக இருப்பார் என்ற நம்பிக்கையோடு எங்களின் அன்புத் தெய்வம் விண்ணுலகிலேயே நிறைவான சுவர்கத்திற்குள் நிறைந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை நாங்கள் வேண்டி அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை மனதார பிரார்த்திப்பதோடு எங்களுடைய வாழ்க்கையிலேயே தீப ஒளியாக இருந்து எங்கள் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்த அன்பு தெய்வத்தின் ஆத்மா இறைவனோடு இணைந்து இன்புற்று இருக்க எல்லாம் வல்ல இறைவனை என்றும் பிரார்த்திப்போமாக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்"
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்து விளக்கின் ஐந்து முகங்கள்.

(திரி போட்டு குத்துவிளக்கு ஏற்றுதல்)

1. பொறுமை
2. சகிப்புத் தன்மை
3. விட்டுக்கொடுக்கும் தன்மை
4. சமயோசித புத்தி
5. வைராக்கியம்

# விளக்கு முகங்களுக்குரிய உரிய பலன்கள்.

ஒருமுகம் ஏற்றினால் - மத்திய பலன்
இரண்டு முகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமை பெருகும்
மூன்று முகம் ஏற்றினால் - புத்திர சுகம்
நான்கு முகம் ஏற்றினால் - செல்வம் பெருகும்
ஐந்து முகம் ஏற்றினால் - சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்

# ஆண்டு கொண்டாட்டங்கள்

25ம் ஆண்டு நிறைவு விழா - வெள்ளி விழா
50ம் ஆண்டு நிறைவு விழா - பொன் விழா
60ம் ஆண்டு நிறைவு விழா - மணி விழா
75ம் ஆண்டு நிறைவு விழா - பவள விழா
80ம் ஆண்டு நிறைவு விழா - முத்து விழா
100ம் ஆண்டு நிறைவு விழா - நூற்றாண்டு விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி ஐந்து வகைப்படும்

1.மகா சிவராத்திரி

2.யோக சிவராத்திரி

3.நித்திய சிவராத்திரி

4.மாத சிவராத்திரி

5.பட்ச சிவராத்திரி

## சின் முத்திரை குறிப்பது யாது?

| | | |
|---|---|---|
| பெரு விரல் | - | இறைவனை குறிப்பது பதி |
| சுட்டு விரல் | - | ஆன்மாவை குறிப்பது பசு |
| நடு விரல் | - | ஆணவத்தைக் குறிப்பது |
| மோதிர விரல் | - | கன்மத்தைக் குறிப்பது |
| சின்ன விரல் | - | மாயையைக் குறிப்பது |

### முருகப்பெருமான் மீது பாடப்பட்ட மிகச்சிறந்த பாடல் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கந்தபுராணம் | - | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| 2. | திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| 3. | கந்தரலங்காரம் | - | அருணகிரிநாதர் |
| 4. | துதிப்பாடல்கள் | - | அருணகிரிநாதர் |
| 5. | கந்தரனுபூதி | - | குமரகுருபரர் |
| 6. | திருமுருகாற்றுப்படை | - | நக்கீரர் |
| 7. | கந்தர் கலிவெண்பா | - | குமரகுருபரர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகருக்குப் பிடித்தவை

| | | | |
|---|---|---|---|
| 1. | கரும்பு | - | பித்தத்தை அகற்றும் |
| 2. | எள்ளு | - | இரும்புச்சத்து தரும் |
| 3. | அவல் | - | சத்துணவு |
| 4. | பொறி | - | தாகம் தணிக்கும் |
| 5. | தேங்காய் | - | இரத்தத்தை சுத்தி செய்தல் |
| 6. | மாதுளை | - | பித்த நீக்கம் |
| 7. | விளாம்பழம் | - | இரத்தத்தை சுத்தி செய்தல |
| 8. | நாவல்பழம் | - | குளிர்ச்சி தரும், கண் எரிச்சலை நீக்கும் |
| 9. | மோதகம் | - | புரதச்சத்து |

## தானத்தின் பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வஸ்திரதானம் | - | ஆயுள் விருத்தி |
| 2. | பூமிதானம் | - | பிரம்மலோபகத்தை தரும் |
| 3. | தேனை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து தானம் செய்ய வேண்டும் | - | புத்திரபாக்கியம் உண்டாகும் |
| 4. | நெல்லிக்காய் தானம் | - | ஞானத்தை தரும் |
| 5. | கோவிலுக்கு தீப தானம் | - | உயர்ந்த பதவி தரும் |
| 6. | அரிசி தானம் | - | பாவம் போக்கும் |
| 7. | அன்ன தானம் | - | நினைத்தது கிட்டும |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்பு

1. கோபமாய் பேசினால் **குணத்தை** இழப்பாய்.
2. அதிகமாகப் பேசினால் **அமைதியை** இழப்பாய்.
3. அதிகாரமாகப் பேசினால் **அன்பை** இழப்பாய்.
4. வெட்டியாய் பேசினால் **வேலையை** இழப்பாய்.
5. வேகமாய் பேசினால் **அர்த்தத்தை** இழப்பாய்.
6. ஆணவமாய் பேசினால் **ஆற்றலை** இழப்பாய்.
7. அவதூறாய் பேசினால் **இறையருளை** இழப்பாய்.

## மொழிகளுக்குரிய சிறப்புப் பெயர்கள்

1. தமிழ் - பக்தி மொழி
2. ஆங்கிலம் - வணிக மொழி
3. பிரெஞ்சு - காதல் மொழி
4. இத்தாலி - இசை மொழி
5. கிரேக்கம் - சட்ட மொழி
6. உருது - கவிதை மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறும் பெற்று பெருவாழ்வு பெறுக

1. கலையாத கல்வி
2. குறையாத வயது
3. கபடு வராத நட்பு
4. குன்றாத வலிமை
5. குன்றாத இளமை
6. கழுபிணி இல்லாத உடல்
7. சலியாத மனம்
8. அன்பகலாத மனைவி
9. தவறாத சந்தானம்
10. தாழாத கீர்த்தி
11. மாறாத வார்த்தை
12. தடைகள் வாராத கொடை
13. தொலையாத நிதியம்
14. கோணாத கோல்
15. துன்பமில்லாத வாழ்வு
16. இறைவன் பாதத்தில் மாறாத அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் இயற்றியவர்களும்

திருக்குறள் என்ற நூலை இயற்றியவர் - திருவள்ளுவர்

ஆத்திசூடி என்ற நூலை இயற்றியவர் - ஔவையார்

பகவத்கீதை என்ற நூலை இயற்றியவர் - வேதவியாசர்

சீராப்புராணத்தை இயற்றியவர் - உமறுப்புலவர்

சத்தியசோதனை என்ற நூலை இயற்றியவர் - மகாத்மா காந்தி

மகாபாரதம் என்ற நூலை இயற்றியவர் - வேதவியாசர்

மகாவம்சம் என்ற நூலை இயற்றியவர் - மகாநாமதேரர்

பெரியபுராணம் என்ற நூலை இயற்றியவர் - சேக்கிழார்

கீதாஞ்சலி என்ற நூலை இயற்றியவர் - ரவீந்திரநாத்தாகூர்

இராமாயணம் என்ற நூலை இயற்றியவர் - வால்மீகி

கம்பராமாயணம் என்ற நூலை இயற்றியவர் - கம்பர்

சூலவம்சம் என்ற நூலை இயற்றியவர் - தர்ம கீர்த்தி தேரர்

குடியரசு என்ற நூலை இயற்றியவர் - பிளாட்டோ

தேசங்களின் செல்வம் என்ற நூலை இயற்றியவர் - அடம் ஸ்மித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தத்தின் வாழ்வு உனது...

வாத்தி வாத்தி என்று வாயார வாழ்த்தி சென்று விட்டாய் நண்பா வாழ்ந்த வயது இதுதானா என்று கேட்டு துடிக்க மறுக்கிறது இதயம்.

சமூகத்தில் ஒருவராக நல்ல உறவுமாக நட்பெனும் துணிவுமாக நாளுக்குநாள் நமது புரிதல் விரிந்து கொண்டது.

நாம் அறிமுகமாகி தசாப்தம் ஒன்று மட்டுமே கடந்தது - ஆனாலும் எத்தனையோ தசாப்தங்கள் கொண்ட உறவாக நம் உள்ளமது ஏற்றுக் கொண்டது.

எத் தருனத்திலும் உள்ளிருப்பதை வெளிக்காட்டா உன் மனம் அதற்கே பொருந்தியதாக புன்னகையுடன் உன்முகம் சில வேளைகளில் அதனை புரிந்தவனாகவும் பல வேளைகளில் புரியாதவனாகவும் கடந்து விட்டேன் நண்பா...

வீட்டிற்கு வந்து செல்லும் போதெல்லாம் மெதுவாக பார்த்து போங்கள் என்று சொன்ன அந்த உள்ளம் நான் விரைவாக போகப் போகிறேன் என்று சொல்ல மறுத்தது ஏன்???

நல்லுள்ளம் கொண்டோரை நாவலி கேட்கக் கூடாது என்பதற்காக தன்னுள்ளே ஈர்த்துக் கொள்வான் ஈசன் என்றெண்ணி ஆறுதல் கொள்வதா??

அழுது புரண்டாலும் விண்ணுலகம் சென்றோர் மீண்டுவரப் போவதில்லை என்றெண்ணி ஏற்றுக் கொள்வதா???
முடியவில்லை நண்பா

நீ இங்கு விட்டுச்சென்ற உனதுள்ளத்தில் உதித்த அனைத்தும் பெரு விருச்சமாய் காலம் கடந்தும் வாழ்ந்து உன்னை வாழ்த்தி நிற்கும்.

உள்ள போது நீ சொன்ன வார்த்தைகளை உணர மறுத்த மனம் நிரந்தரமாக உறங்கும் போது நீ சொல்லாத வார்த்தைகளையும் உணர்ந்து கோள்கின்றது.

அகிலன் வாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார்

மானிடப் பிறவி எடுத்த நாள் முதல் இப்புண்ணிய பூமியில் தான் வாழுங்கால் இறைவன் பாதம் பணிந்து போற்றி வணங்காதார் தான் மடிந்த பின்னும் தன் ஆத்மா நற்கதி சேராதென்பர்.
நாம் இப்பிறவி எடுத்ததே முக்தி இன்பம் பெறுவதற்கு என்ற கூற்றுத் தெளிவு படுத்துகின்றது.
மனிதன் பிறந்து வளமோடும் சுகமோடும் வாழ்ந்து இறப்போடு அவன் வாழ்வு நிறைவடைகின்றது. இந்த நிறைவு நன்நாளை எண்ணி வாழாத மனிதன் தன் வாழ்க்கையில் பல கொடிய தீய எண்ணங்களிலும் செயல்களிலும் வீழ்ந்து மடிந்து கொண்டிருக்கின்றான். எனவே அன்பர்களே முற்பிறப்பு முதல் இப்பிறப்பு வரை அவர்கள் செய்த பாவங்கள் தீர இறந்த ஒருவரின் கிரியையிலாவது உற்றார் உறவினர் கலந்து தேவாரம், சிவபுராணம், போற்றி அர்ச்சனை பாடியும் செவிமடுத்தும் ஒருவர் பாட மற்றோர் பின் சீர்பாடி மயானம் சென்று வாய்க்கரிசியிட்டு கைமண் போட்டு அடக்கம் செய்த பின் அமைதியோடும் பக்தியோடும் பட்டனத்துப்பிள்ளையார், அருணகிரியார், திருப்புகழோடு இந்த மோட்சப் பாடல்களை பாடி அன்னவரின் ஆத்ம நற்பரகதி அடைய இறைவனை வேண்டிப்பணிந்து வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

"எந்நன்றி கொண்டாருக்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்ப விளக்கு மறைந்த செய்தி கேட்டு நேரடியாக வைத்தியசாலைக்கு வருகை தந்து ஆறுதல் கூறி உதவி புரிந்தவர்களுக்கும், வெளியிடங்களிலிருந்து வருகை தந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தும், மலர் மாலைகள் சூட்டி அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும், பெனர் கட்டி அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அன்னாரின் நண்பர்களுக்கும், இந்நூலை அச்சிட்டு தந்த அச்சகத்தினருக்கும் மேலான நன்றிகளை பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org